# கல்வி அமைச்சின் வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 13.02.2015 மாலை 2.30 மணி

சமுகமளித்தோர்:-

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா
- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம், பொது நிர்வாகம்) மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம்.
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (யாழ்ப்பாணம், வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, கிளிநொச்சி,முல்லைத்தீவு, துனுக்காய், மன்னார், மடு)
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம்,வலிகாமம்)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ,மாகாணக் கல்வித் திணைக்களம்.
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்
- PICTEC முகாமையாளர்.

கௌரவ கல்வி அமைச்சர் தலைமையில் கூட்டம் ஆரம்பனமானது முதலில் செயலாளரால் TSEP இரண்டு வேலைகளுக்கான ஒப்பந்தகாரர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு மாகாணக் கல்வித் திணைக்கள கணக்காளர் நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டது ( மு/மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலயம், மு/பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயம்). கௌரவ கல்வி அமைச்சரால் மாகாண தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிலையத்தின் (PICTEC) வேலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு வவுனியா மாவட்டப் பாடசாலைகள் வேலைப் பரிசோதகருக்கு தெரிவிக்கப்பட்டது.

- Fiber Optic cable connection இனை இரண்டு வார காலத்திற்குள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அதற்குரிய நிதியினை மாகாணக் கல்வித் திணைக்களத்தினூடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ கல்வி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. 2015 PSDG குறைநிரப்பு பிரேரணை மூலம் இந் நிதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- நீர் வடிகட்டி (Water filter) பொருத்துதல் வேண்டும்.

- **நுளம்பு வலை போடப்படுதல் வேண்டும்.**
- **முதலாம், இரண்டாம் மாடிகளில் ஜன்னல்களுக்கு திரைச்சீலைகள் போடப்படுதல் வேண்டும்.**
- **மாகாண சுகாதார வைத்திய அதிகாரி/பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி/வைத்திய அதிகாரியுடன் கலந்துரையாடி கலந்துரையாடல்களில்/செயலமர்வுகளில் கலந்துகொள்பவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் போசனைப் பெறுமானம் அதிகரிக்கப்பட வேண்டும்.**
- **சலவைஇயந்திரம் (Washing Machine) மூன்று கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**
- **தெரு விளக்குகள் (Street Lamb) பதினொன்று அமைக்கப்படல் வேண்டும். இதற்கு மின்சாரத்தினை சிக்கனப்படுத்துவதற்கு சூரிய மின்கலத்தை பயன்படுத்தல் வேண்டும்.**

**பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் மிகுதி வேலைகள் 2014 இன் மு/உடுப்புக்குளம் மகா வித்தியாலய ஏற்கனவே பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட கட்டடத்தின் மிகுதி வேலையைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக 3 Mn தேவையென கூறப்பட்டது. மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் பகுதி பூர்த்தி செய்யப்பட்ட கட்டடத்திற்கு நிறைவு செய்ய மேலதிகமாக 1 Mn தேவையெனக் கூறப்பட்டது.**

**பின்வரும் வலயங்களில் முகாமைத்துவ உதவியாளர்கள் பற்றாக்குறையென வலயக் கல்விப் பணிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.**
**வவுனியா வடக்கு -06; துணுக்காய் -06;முல்லைத்தீவு -06; கிளிநொச்சி -07; வலிகாமம் -04; வடமராட்சி -01.**

**இதற்கு தற்போது முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதால் அந்தந்தப் பிரதேசங்களில் வசிப்பவர்களை விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. பிரதம செயலாளருக்கு மாகாண கல்வி அமைச்சில் பாடசாலைகள் வேலைகள் பிரிவு செயற்படுவதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக (கல்வித் துறை சார்ந்த வேலை) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறியியலாளர்கள், மற்றும் மாகாண மட்டத்தில் பட வரைஞர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (12 x2)+2) ஆளணியையும் தருதல் வேண்டும். இதில் அதி விசேட தரத்தில் நான்கு தொழினுட்ப உத்தியோகத்தர்கள் அமைதல் வேண்டும்.**

வவுனியா தெற்கு வலயத்தில் நிமித்த அடிப்படையிலான ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படாமை தொடர்பான முறைப்பாடு தொடர்பாக செயலாளரால் வினவப்பட்ட பொழுது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தங்களுக்கான மாதாந்த போக்குவரத்துப் படி அதிகரிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. இதற்கு கௌரவ கல்வி அமைச்சரினால் அமைச்சரவைக்கு வாரியப்பத்திரம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. 23.02.2015 இற்கு முன் TSEP 2015 இற்குரிய மதிப்பீட்டினை செய்து அனுப்பிவைக்குமாறு சகல தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு முடிவுறுத்தப்படாத PSDG, பிராந்திய அபிவிருத்திக்கான நிதி, பிராந்திய சம அபிவிருத்திக்கான நிதி, TSEP வேலைத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் கொடுப்பனவுகள் யாவும் 31.03.2015 இற்குள் பூரணப்படுத்தி முடிவுறுத்தப்பட வேண்டுமென மாகாண பிரதம கணக்காளரால் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் கூட்டம் பிற்பகல் 4.45 மணிக்கு கௌரவ கல்வி அமைச்சரின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

சி. சத்தியசீலன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
வடமாகாணம்
யாழ்ப்பாணம்

சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.